1990 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வளவு தூரம் சொல்கிற காரணத்தால் பேருந்துகளை வேண்டுமானால் விடலாம்.

அருள்மிகு மகர நெடுங்குழைநாதர் கோவில்.

* 7980 திரு. குமரி அனந்தன்:

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம் தென்திருப்பேரை அருள்மிகு மகரநெடுங்குழைநாதர் கோயிலின் அர்த்த மண்டபத்தில் வைத்து வழிபாடு செய்த உலா மூர்த்தி (உத்ஸவர்) இப்போது அதிகாரிகளால் இடமாற்றம் செய்யப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று முன்பிருந்த நடைமுறைக்கே அரசு கொண்டுவருமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிதம்பரனார் மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், தென் திருப்பேரை, அருள்மிகு மகரநெடுங்குழைநாதர் திருக்கோயிலின் அர்த்த மண்டபத்தில் சுமார் 26 உற்சவ விக்கிரகங்கள் கட்டிலின் மேல் வைத்து வழிபாடு நடத்தப்பட்டு வந்ததால், பக்தர்கள் அர்த்த மண்டபத்திற்கு வெளியே நின்று கருவறையில் உள்ள சுவாமி மற்றும் தாயார் விக்கிரகங்களைப் பார்த்து சேவிக்க இயலாமல் இருந்தது. இது தவிர இந்த இடத்தில் விக்கிரகங்களுக்கு பாதுகாப்பும் இல்லாது இருந்தது. ஆகவே, 23—7—1986-ல் ஆலயத்தில் நகைகள் களவு போனதைக் கருத்தில் கொண்டும், உற்சவ விக்கிரகங்களை திருக்கோயில் கருவறைக்கும், அர்த்த மண்டபத்திற்கும் இடையில் உள்ள ''இடைநாழி'' என்று அழைக்கப்படும் சன்னதியில் பாதுகாப்பாக வைத்து எல்லோரும் நல்ல முறையில் தரிசனம் செய்ய வசதி செய்யப்பட்டு உள்ளது.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, தென் திருப்பேரை அருள்மிகு மகரநெடுங்குழைகாதர் சன்னதி நவ திருப்பதிகளில் ஒன்று. இது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நெடுங்குழைக்காதரா, நாதரா? பட்டியலில் நாதர் என்று இருக்கிறது.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, மகரநெடுங்குழைக்காதர், அதாவது காதை உடையவர். இது நவ திருப்பதிகளில் ஒன்று. இதிலே முக்கியமாக அமைச்சர் பெருமகன்

சொல்கிறபோது அர்த்த மண்டபத்தில் இருந்த உற்சவ விக்கிரகங்களை எடுத்து மூலக் கிரகத்திற்கு இடையே உள்ள ''இடை நாழி''யில் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தக் கோயிலின் தத்துவம் வேத ஒலி கேட்பதும், விழா ஒலி கேட்பதும், அதோடு பிள்ளைக் குழாம் விளையாட்டைக் காண்பதும் என்று இருக்கிறது. அந்த ஊர்ப் பிள்ளைகள் விளையாட்டைக் காண வேண்டும் என்பதற்காக அந்த அர்த்த மண்டபத்தில் இந்த உத்சவ மூர்த்தி ஸ்ரீதேவி, பூதேவி சமேதரராக வைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

9–55 மணி

அதுமட்டுமல்லாது, இந்தச் சன்னதியிலே கருடன் கூட கிடையாது. ஏன் என்றால், கருடன் கூட இந்த மகரநெடுங்குழைக்காதர் பிள்ளை விளையாட்டைப் பார்க்க முடியாது என்பதற்காக கருடனைக் கூட அங்கே வைப்பதில்லை. எனவே இவ்வளவு தத்துவம் நிறைந்த ஒரு உத்ஸவர் அந்த இடத்தில் வைக்கப்பட்டு இருப்பதை மாற்றியது அதிகாரிகள் செய்த செயலாக இருந்தாலும், அமைச்சர் அவர்கள் அதற்கு நியாயங்கள் எதையும் சொல்லாமல் மீண்டும் அதை பழைய இடத்திலே வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே அதிகாரிகள் செய்கின்ற போது, அங்கே கோவிலிலே இருக்கக் கூடிய குருக்களையும் கலந்துதான் செய்யப்படுகின்றது என்று நான் கருதுகிறேன். ஆகவே நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அனந்தனார் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல மீண்டும் அர்த்த மண்டபத்திலேதான் இருக்க வேண்டும் என்று அங்கே உள்ள குருக்கள் அங்கே உள்ள அந்த ஊரைச் சேர்ந்த பெரியவர்கள் முடிவு செய்தால் நிச்சயமாக அங்கே வைப்பதற்கு எவ்வித மான ஆட்சேபணையும் இருக்க முடியாது.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்திருப்பேரை, அருள்மிகு மகரநெடுங்குழைக் காதர் நெடுங்குழையும், நீள்முடியும், வைர வைடூரிய முத்து மாலையையும் இழந்து கடந்த காலத்தில் வெறும் காதராக ஆக்கப்பட்டார்கள் என்பதை அரசு அறியுமா? வரகுண பாண்டியன் காலம் முதல் வரலாற்றுப் பெருமை மிக்க இந்தத் திருகோவிலில் களவுகள் போகாமல் காத்திடவும், கள்வரைக் கண்டு பிடிக்கவும் இதுவரையில் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. ஆனால் கொள்ளை அடிக்கப்பட்ட நகைகளை மீட்டு வழக்கு மன்றத்திலே இருப்பதை, அந்தக் கோவிலின் சார்பில் ஒரு மனுச் செய்தால்

அதைக் கோவிலுக்குத் திருப்பிக் கொடுத்துவிடுவதான நிலைமை வந்திருக்கிறது. இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அந்த கொள்ளையிலே ஈடுபட்ட— இங்கே நம்முடைய அனந்தன் அவர்கள் அடிக்கடி குறிப்பிடு வார்களே—ஃபூல் பாண்டியன், அவன் சில மாதங்களுக்கு முன்பு தீக்குளித்து தற்கொலை செய்து கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது.

பார்வையற்றவர்களுக்கு பள்ளிக்கூடம்

*2648 திரு. வீ. தமிழ்மணி :
மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கற்பட்டில் பார்வையற்றவர்களுக்குப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கற்பட்டு மாவட்டத்தில் பார்வையற்றோர் பள்ளிக் கூடத்தைப் புதிதாக ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீல னையில் இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்தில் பார்வையற்றோர் பள்ளிக்கூடம் துவங்க என்னென்ன விதிமுறைகள் கையாளப்படுகின்றன என் பதை அறிவிக்க இயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் பூவிருந்த வல்லியில் ஏற்கனவே ஒரு பார்வையற்றோருக்கான பள்ளி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு இடத்திலே புதிதாக பார்வையற்றோர் பள்ளியைத் துவக்குவதற்கு வேறு எந்த விதியும் தேவையில்லை, அரசு நிதிதான் தேவைப்படுகிறது.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு அதைச் சுற்றி 6 தொகுதிகள் அடங்கி இருக்கின்றன. பூவிருந்தவல்லியில் படிப்பதற்கு சுமார் 60 கிலோ மீட்டர் தூரம் அவர்கள் வந்து பள்ளிக்குச் செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே மைய மாக இருக்கிற செங்கற்பட்டு நகரத்தில் ஒரு பார்வையற்றோர் பள்ளியைத் துவக்கும் செயற் குறிப்பை அரசு மேற்கொள்ளுமா என நான் அறிய விரும்புகிறேன்.